# சம்மாந்துறை பிரதேச சபையின் 04வது சபையின் 41வது கூட்டறிக்கை
# 2021.07.13

சம்மாந்துறை பிரதேச சபையின் 04வது சபையின் 41வது அமர்வு 2021.07.13 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை காலை 9.30 மணிக்கு சம்மாந்துறை பிரதேச சபையின் சபா மண்டபத்தில் தேசிய கீதம் மற்றும் இறை சிந்தனையுடன் கௌரவ தவிசாளர் ஏ.எம்.முஹம்மட் நௌசாட் அவர்களின் தலைமையில் ஆரம்பமானது.

**சமூகமளித்த கௌரவ உறுப்பினர்கள்**

| | | |
|---|---|---|
| 01. ஜனாப்.ஏ.எம்.எம். நௌசாட் | கௌரவ தவிசாளர் | அ.இ.ம.கா |
| 02. ஜனாப்.ஏ.அச்சி முஹம்மட் | கௌரவ உப தவிசாளர் | ஸ்ரீ.சு.க |
| 03. ஜனாப்.ஐ.எல்.நஜீம் | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 04. ஜனாப்.எஸ்.எம்.எம்.முஸ்தபா | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 05. ஜனாப்.யூ.எல்.அஸ்வர் | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 06. திருமதி.ஆர்.வளர்மதி | கௌரவ உறுப்பினர் | ஸ்ரீ.சு.க |
| 07. திரு.என்.கோவிந்த சாமி | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 08. ஜனாப்.ஏ.சி.முஹம்மட் சஹீல் | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 09. ஜனாப்.எம்.ரீ.பௌசுள்ளாஹ் | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 10. ஜனாப்.ஏ.எம்.எம்.றியாஸ் | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 11. ஜனாப்.ஏ.எல்.எம்.ஜிப்ரி | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 12. ஜனாப்.எஸ்.நளீம் | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 13. ஜனாப்.ஏ.யூசுப் லெவ்வை | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 14. திருமதி.கே.எம்.இன்பவதி | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 15. திருமதி.எம்.எஸ்.சரீபா | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 16. திருமதி.எஸ்.எம்.சித்தி நிலுவ்பா | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 17. திருமதி.கே.எல்.சிஹாமா | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 18. ஜனாப்.வை.பீ.எம்.முஸம்மில் | கௌரவ உறுப்பினர் | ஸ்ரீ.சு.க |
| 19. திருமதி.கே.குலமணி | கௌரவ உறுப்பினர் | ஸ்ரீ.சு.க |

**சமூகமளிக்காத கௌரவ உறுப்பினர்கள்**

| | | |
|---|---|---|
| 01. ஜனாப்.ஐ.எல்.எம்.மாஹிர் | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |

**சமூகமளித்த உத்தியோகத்தர்கள்**

| | |
|---|---|
| 01. ஜனாப்.எம்.ஏ.கே.முஹம்மட் | செயலாளர் |
| 02. செல்வி.ஏ.பீ.ஏ.ஸஹானா | அலுவலக உதவியாளர் |

**கௌரவ தவிசாளர் ஏ.எம்.முஹம்மட் நௌசாட் அவர்கள்:**

பிஸ்மில்லாஹிர்ரஹ்மானிர்ராஹீம். எல்லாப்புகழும் இறைவனுக்கே, எல்லோரையும் 04வது சபையின் 41வது அமர்வுக்கு வரவேற்றவனாக,

இவ் அமர்வின் முதல் அம்சமாக சென்ற மாத கூட்டறிக்கை சமர்ப்பித்தலும் அங்கீகாரம் பெறலும். திருத்தங்கள் இருந்தால் கூறலாம். இல்லாவிட்டால் ஒருவர் ஆமோதிக்கலாம்.

**கௌரவ உறுப்பினர் எம்.எஸ்.சரீபா அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே, திருத்தங்களை எழுதிக் கொடுத்திருக்கின்றேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

அந்த திருத்தங்களை உள்வாங்கியவனாக,

| | | | |
|---|---|---|---|
| பிரேரித்தவர் | : | கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : | கௌரவ உறுப்பினர் | என்.கோவிந்தசாமி |

கூட்டறிக்கை திருத்தங்களுடன் சபையில் சமூகமளித்திருந்த கௌரவ உறுப்பினர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
கௌரவ உறுப்பினர் மாஹிர் அவர்கள் இந்த சபைக்கு சுகவீனம் காரணமாக சமூகமளிக்க முடியாது என்று அறிவித்தல் விடுத்திருக்கின்றார். அவருக்கு விடுமுறை வழங்குவதற்கான அனுமதி.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ.சீ.எம்.சஹீல் |

சபையில் சமூகமளித்திருந்த கௌரவ உறுப்பினர்களால் ஏகமனதாக அனுமதிக்கப்பட்டது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
எமது கௌரவ உறுப்பினர் சஹீல் அவர்கள் மிகவும் மோசமான நிலையில் காணப்பட்ட பல்கலைக்கழகத்திற்கு பின்னால் உள்ள பகுதியை தான் பொறுப்பெடுத்து ஒரு மாத காலத்திற்கு மேல் சபையின் ஊழியர்களின் உதவியோடு நீர்ப்பாசன திணைக்களத்தின் அனுமதியைப் பெற்று இன்று ஏறத்தாள 80 பேர்ச் காணி மீளப்பெறப்பட்டிருக்கின்றது. அதை எதிர்காலங்களில் பாதுகாப்பு வேலி இட்டு ஒரு ஆக்கபூர்வமான நடவடிக்கைகக்கு பாவிப்பதற்கு நாம் ஏற்கனவே இந்த சபையில் முடிவு எடுத்திருந்தோம். அந்த முயற்சியில் முழு மனதாக நின்று அதை செயற்படுத்தியதற்கு சபையின் சார்பாக கௌரவ உறுப்பினர் சஹீல் அவர்களுக்கு நன்றி கூறியவனாக, அடுத்ததாக இந்த வருடத்தின் PSDG மாகாண சபையின் அபிவிருத்தி நிதியத்தில் இருந்து நமக்கு ஒதுக்கப்பட்ட வேலைகளில் ஒன்றான மல்லிகைதீவு கிராமத்திற்கு நீர்த்தாங்கிகள் வழங்கும் வைபவத்தை செயலாளர் சுகயீனமாக இருந்த காரணத்தினால் அதன் முழுப் பொறுப்பையும் எடுத்து வெற்றிகரமாக நடாத்திய நமது சன சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் அவர்களுக்கும் சபையின் ஊழியர்களுக்கும் உங்கள் சார்பாக நன்றி கூறியவனாக,

இரண்டு விடயங்களைப் பற்றி சபைக்கு அறியத்தரலாம் என்று நினைக்கின்றேன். அதில் ஒன்று நகர சபை வீடுகளில் ஆரம்பத்தில் திட்டமிடும் போது ஒரு துண்டு காணி சிறுவர் பூங்காவிற்காக ஒதுக்கப்பட்டிருந்த காணி. அது சட்டவிரோதமாக சிலரினால் அது கைப்பற்றப்பட்டு அதன் பின் பிரதேச சபையினால் கட்டடம் கட்டப்பட்டு இன்று அது நீதிமன்றத்தின் இறுதி தீர்ப்பிற்காக இருக்கும் நிலையில்; அதை சுற்றி இருக்கும் பாதையை செப்பனிடுவதற்கு பிரச்சினைகள் எழுந்திருக்கின்றது. அதை தீர்ப்பதற்கு கௌரவ உறுப்பினர் அஸ்பர் அவர்களும் பாடுபட்டார்கள். ஆனால் அது பயனளிக்கவில்லை. இந்த விடயத்தை நாம் இத்தோடு விட்டுவிட முடியாது. அதனால் சபை உத்தியோகபூர்வமாக நில அளவியல் திணைக்களத்திற்கு எழுதி அவர்கள் இந்த பாதையை இனங்கண்டு தருமாறு நாம் ஒரு விடயத்தில் இறங்கினால் நிச்சயமாக அதற்கு தீர்ப்பு காணலாம் என்று நினைக்கின்றேன்.

அதே நேரம் மட்டக்களப்புத்தரவையில் உள்ள பொதுமைதானம் ஒரு சர்ச்சையாக மாறி அமைச்சர்களுக்கும், ஜனாதிபதி அவர்களுக்கும், பொலீஸ் நிலையத்திற்கு சென்று இன்று சகல இடங்களுக்கும் அதன் உண்மை நிலை ஆவணப்படுத்தப்பட்டு இருக்கின்றது. நான் கௌரவ உறுப்பினர்கள் சிலரை அழைத்து அதை ஆராய்ந்து சட்டரீதியாக நமக்கு விளையாட்டு மைதானத்தை பாவிப்பவர்களுக்கு பாதிப்பு இல்லாமல் அந்த பாதையை செப்பனிடுவதற்கு முடிவு எடுத்தோம். அதை உத்தியோகபூர்வமாக செய்வதற்குரிய அறிவுரைகளை நாம் RDA இற்கு அறிவிக்க வேண்டும். அதே போல் இன்று காலையில் பிரதேச செயலாளரிடம் இருந்து 106 கிராமிய பாதைகளின் பட்டியல் ஒன்று அனுப்பப்பட்டிருக்கின்றது. இவைகள் கிராமிய உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சில் இருந்து இவ் அனுமதி வந்திருக்கின்றது. இதன் பிரதிகள் உங்களுக்கு தரப்பட்டிருக்கின்றது என்று நினைக்கின்றேன். இவைகளை ஆக்கபூர்வமான முறையில் செய்து முடிப்பதற்கு உங்களின் ஒத்துழைப்பு இருக்க வேண்டும். இதை 09ம் மாதத்திற்கு முன் செய்து முடிக்க வேண்டும் என்று அறிவித்திருக்கின்றார். இதில் எனக்கு விளங்காத விடயம் Name of Proposer என்று வந்திருக்கின்ற பெயர்கள் பிரதேச செயலகத்திற்கு கூட தெரியாது இதை நான் உத்தியோகபூர்வமாக கூறியுள்ளேன் அதையும் அறிவித்தவனாக,

நீர்த்தாங்கிகள் விடயத்தில் உப்புரிமலை மக்கள் சிலருக்கு நீர் ஒழுங்காக சென்றடைவதில்லை என்ற முறைப்பாடு இருந்தது. அப்படியான இடங்களை நாம் இனங்கண்டு அதை EDO, GS, DS மூலம் உறுதிப்படுத்தினால் எஞ்சி இருக்கும் சில நீர் தாங்கிகளை உத்தியோகபூர்வமாக அந்த குடும்பங்களுக்கு பாரம் கொடுக்கலாம்.

**கௌரவ உறுப்பினர் எஸ்.நளீம் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, 40 வீட்டுத்திட்டத்திலும் மிகக்கூடுதலான மக்கள் கஸ்டப்படுகின்றார்கள்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
அப்படியான இடங்களை சரியான ஆவணத்துடன் உறுதிப்படுத்தினால் வழங்கலாம்.

அடுத்ததாக சென்ற மாதத்தின் செலவீனங்களை அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கின்றேன். அதில் ஏதாவது கேள்விகள் இருப்பின் அதனை கேட்கலாம். இல்லாவிடில் அதனை ஆமோதிக்கலாம். இன்று வரை நமது மொத்த வருமானம் 27.5 மில்லியன். இதில் 11 மில்லியன் முத்திரைப்பணம் ஆகும். முத்திரைப்பணம் பணம்தான் எம்மை காப்பாற்றிக் கொண்டு செல்கின்றது.

## தீர்மானம் - 04/41/01

சென்ற மாதம் 2021.06.01 தொடக்கம் 2021.06.30 வரையிலான செலவீனங்களும் மற்றும் கொடுப்பனவுகளுக்குமான செலவு விபரங்களுக்கு அனுமதி வழங்குவதற்கான பிரேரணை.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | எம்.எஸ்.சரீபா |

பிரேரணை சபையில் சமூகமளித்திருந்த கௌரவ உறுப்பினர்களால் ஏகமனதாக அனுமதிக்கப்பட்டது.

## தீர்மானம் - 04/41/02

மே, ஜூன் மாதங்களில் கொவிட் - 19 காரணமாக விதிக்கப்பட்ட பயணத்தடையினால் எமது சபையின் கீழ் இயங்கும் ஹிஜ்ரா, மல்வத்தை, பழைய (பஸார்) பொதுச் சந்தைகளில் உள்ள கடைகள் மற்றும் சபையினால் குத்தகைக்கு விடப்பட்ட இறைச்சிக் கடைகள் மூடப்பட்டும், ஹிஜ்ரா, மல்வத்தை திறந்த வெளிச் சந்தை என்பன குத்தகைக்கு பெறபட்டவர்களால் வருமானம் பெறாத காரணத்தினாலும், அவர்களுக்கு வருமான இழப்பு ஏற்பட்டுள்ளது. இவைகளுக்கான மே, ஜூன் மாதங்களுக்கான வாடகையை விலக்களிப்பு (விட்டுவிடுவதற்கு) செய்வதற்கான பிரேரணை.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ.எம்.எம்.றியாஸ் |

பிரேரணை சபையில் சமூகமளித்திருந்த கௌரவ உறுப்பினர்களால் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

## தீர்மானம் - 04/41/03

கொவிட் - 19 பரவல் காரணமாக, பொதுமக்களிடம் அறவிடப்படுகின்ற Assessment Tax 2வது காலாண்டிற்கான தண்டப்பணம் அறவிடாமல் விடுவதற்கான பிரேரணை.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | எஸ்.நளீம் |

பிரேரணை சபையில் சமூகமளித்திருந்த கௌரவ உறுப்பினர்களால் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

**தீர்மானம் - 04/41/04**

செயலாளருக்கு தொடர்ச்சியாக வழங்கப்பட்டு வந்த தொலைபேசி கொடுப்பனவு ரூபா 2000.00 உள்ளூராட்சி திணைக்களத்தினால் மீளளிப்பு செய்யப்படாத காரணத்தினால் இதனை தொடர்ந்து சபை நிதியிலிருந்து வழங்குவதற்கான பிரேரணை.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஆர்.வளர்மதி |

பிரேரணை சபையில் சமூகமளித்திருந்த கௌரவ உறுப்பினர்களால் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

**தீர்மானம் - 04/41/05**

சபையின் தொழில்நுட்ப மதிப்பீட்டுக்குழு கூட்டங்களில் பங்குபற்றும் அங்கத்தவர்களுக்கு கொடுப்பனவு வழங்குவதற்கான பிரேரணை.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | கே.எம்.இன்பவதி |

பிரேரணை சபையில் சமூகமளித்திருந்த கௌரவ உறுப்பினர்களால் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

**தீர்மானம் - 04/41/06**

2021.04.20 ஆந் திகதி நடைபெற்ற 04வது சபையின் 38வது அமர்வின் 09வது தீர்மானத்திற்கமைய Sri Lanka Telecom நிறுவனத்தினால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையின் பிரகாரம் தற்போது பாவனையில் உள்ள Intercom வசதிகளை மேம்படுத்துவதற்கும், அதனோடு இணைந்ததாக உயர்தரமான Data Cable வசதிகளை ஏற்படுத்துவதற்கான பிரேரணை.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | யூ.எல்.அஸ்பர் |

பிரேரணை சபையில் சமூகமளித்திருந்த கௌரவ உறுப்பினர்களால் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

**தீர்மானம் - 04/41/07**

ஆதனவரி அறவீட்டுப் பகுதிக்கும் மற்றும் தற்காலிக மதிப்பீடு செய்யப்பட்ட புதிய அறவீட்டுப் பகுதிகளுக்கும் ஆதனவரி பற்றிய அறிவித்தல் வழங்குவதற்காக 12,000 K Form மற்றும் 30 ஆதனவரி இடாப்பு அச்சிடுவதற்குமான பிரேரணை.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | கே.எல்.சிஹாமா |

பிரேரணை சபையில் சமூகமளித்திருந்த கௌரவ உறுப்பினர்களால் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

**தீர்மானம் - 04/41/08**

LDSP நிகழ்ச்சி திட்டத்தின் கீழ் 2021 ம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கீட்டின் கீழ் பின்வரும் வேலைகளை செய்வதற்கான பிரேரணை.

I. Construction of Children Park at Veeramunai – 01 (11mn)
II. Construction of Amusement Park Old Market Building Complex at Sammanthurai – 05 (9.72mn)

III. LDSP செயற்றிட்டத்தின் கீழ் PPTA உப செயற்திட்டத்தில் அனுமதிக்கப்பட்ட வேலைத்திட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட 1.4mn நிதி ஒதுக்கீட்டிற்கான திட்டத்தினை செயற்படுத்தல்.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | என்.கோவிந்தசாமி |

பிரேரணை சபையில் சமூகமளித்திருந்த கௌரவ உறுப்பினர்களால் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

**தீர்மானம் - 04/41/09**

மாகாண சபைகள் மற்றும் உள்ளுராட்சி இராஜாங்க அமைச்சினால் அனுப்பப்பட்ட பிரதேச சபைக்கான வலுவூட்டும் முதலீட்டு வேலைத்திட்டத்தின்கீழ் பின்வரும் வேலைகளை செய்வதற்கான பிரேரணை.

I. Improvement of Public Library Building Veeramunai-04, Sammanthurai.
II. Renovation of Boundary wall at Veeramunai-04, Sammanthurai
III. Installation of street lamp in Veeramunai area, Sammanthurai
IV. Renovation of Concret surface drainage at S-24 channel (part of Zam Zam drain) Sammanthurai-12
V. Renovation of Boundary wall at Veeramunai Public Cemetry-04, Sammanthurai
VI.Renovation of Concrete surface drainage and Culverts at 30 Houses Scheme, Veeramunai, Sammanthurai.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | கே.எல்.சிஹாமா |

பிரேரணை சபையில் சமூகமளித்திருந்த கௌரவ உறுப்பினர்களால் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

கௌரவ உறுப்பினர்களே, சபைக்கு முன்மொழிவுகள் என்று வருகின்றபோது முன்மொழிவுகள் வேறு, அறிவித்தல்கள் வேறு. முன்மொழிவுகள் என்பது ஒரு Project ஆக இருக்க வேண்டும். சபைக்கு முன்மொழிவு வைப்பதானால் ஒன்று 07 வேலை செய்யும் நாட்களுக்கு முன் சமர்ப்பிக்கப்பட வேண்டும். அடுத்தது அது Proposal ஆக அதில் அடைய எண்ணும் நோக்கம், அதை எப்படி செய்யலாம், அதற்கு நிதி எவ்வளவு உத்தேசமாக தேவைப்படும், அதை எப்படி பெறலாம் என்று ஒரு திட்டமாக வந்தால்தான் அதை சபைக்கு சமர்ப்பிக்கலாம். மற்றவைகள் அறிவித்தல்கள். உங்களது அடிப்படை தேவைகள், வட்டாரத்தில் இருக்க வேண்டிய தேவைகள் அதை நீங்கள் சபை மூலமாக செய்ய வேண்டும் என்றால் அதை ஒரு கடிதமாக எடுத்து கடிதங்கள் என்று வருகின்ற போது அது வாசிக்கப்படும். ஏதாவது விசேட வேலைகள் இருந்தால் அதைப் பற்றி நாம் மற்றவர்களின் ஆலோசனைகளையும் பெறலாம். இந்த சபைக்கு ஒரே ஒரு முன்மொழிவுதான் உரிய காலத்திற்கு வந்தது. கௌரவ உறுப்பினர் நளீம் அவர்களின் முன்மொழிவு. பௌஸ் மாவத்தை வீதியினை வீதி அபிவிருத்தி அதிகார சபையின் கீழ் கொண்டு வருதல். அடுத்தது சம்மாந்துறை பிரதேச சபைக்கு சொந்தமான வீதிகளின் அபிவிருத்தி சம்மந்தமாக. சுருக்கமாக உங்களது முன்மொழிவினை கூறலாம்.

**கௌரவ உறுப்பினர் எஸ்.நளீம் அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே, பௌஸ் மாவத்தை வீதி என்பது இப்போது பிரபல்யமாக மிகக் கூடுதலான கனரக வாகனங்களும், பார ஊர்திகளும் செல்லக்கூடிய பாதையாக இருக்கின்றது. அந்த பாதையிலே மிகக் கூடுதலான கட்டட நிர்மானப் பொருட்களை விற்பனை செய்கின்ற நிலையங்கள், கடைகள் இருப்பதனால் கூடுதலான சீமெந்து லொறிகள் மற்றும் கம்பிகளை ஏற்றிக்கொண்டு வருகின்ற வாகனங்கள் செல்வதற்கான கட்டமைப்போடு அப் பாதை அமைக்கப்படவில்லை. ஏனென்றால் 2015ம் ஆண்டு அப் பாதை சீர்திருத்தப்பட்டு மக்கள் பாவனைக்காக வழங்கப்பட்ட

பாதை இப்போது மிகவும் மோசமான ஒரு நிலமைக்கு தள்ளப்பட்டு இருக்கின்றது. அதே நேரம் வீதி அபிவிருத்தி திணைக்களத்தினால் கடந்த டிசம்பர் மாதம் அளவிலே அந்தப் பாதை மீண்டும் மீள் திருத்தம் செய்யப்பட்டது. ஆனால் 06 மாத காலத்திற்குள் அப் பாதை பழைய நிலையை அடைந்துள்ளது. எனவே, இந்தப் பாதையை கணரக வாகனங்கள் செல்லக்கூடிய வடிவமைப்பில் அமைப்பதாக இருந்தால் அந்தப் பாதையினை வீதி அபிவிருத்தி அதிகார சபையின் கீழ் கொண்டு வர வேண்டும். இதனை சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கு தெளிவுபடுத்தி எமது சபையின் ஊடாக இதனை முன்னிறுத்தி அப் பிரதேசத்தில் வாழ்கின்ற மக்களின் நலன் கருதி இவ் வேலைத்திட்டத்தினை நாம் முன்னெடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன். அதே நேரம் பாதைகள் அபிவிருத்தி சம்மந்தமாக அவர்கள் உத்தியோகபூர்வமாக அறிவித்திருப்பதனால் நாம் அதனை பேச வேண்டியதில்லை என்று நினைக்கின்றேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

சம்மாந்துறையில் 03 வகையான பாதைகள் இருக்கின்றது. ஒன்று RDA இற்கு கீழ் இயங்கும் பாதைள், அடுத்தது RDD இற்கு கீழ் இயங்கும் பாதைகள், எஞ்சிய பாதைகள் எல்லாம் பிரதேச சபைக்குரியது. நமக்கு இருக்கின்ற பாரிய சவால் எல்லாப் பாதைகளிலும் எல்லா வகையான வாகனங்களும் செல்லும். சில பாதைகளை அந்த நேரத்தில் பிரதேச சபையினால் பராமரிக்க முடியாது என்ற ஒரு காரணத்திற்காகத்தான் மாகாண சபைக்கு மர்ஹூம் M.A.அப்துல் மஜீட் அவர்களின் காலத்தில் சில முக்கியமான பாதைகள் RDD இற்கு கொடுக்கப்பட்டது. இன்றைக்கு RDD இன் பராமரிப்பிற்கு பணம் ஒதுக்கப்பட்டிருக்கின்றது என்ற விடயம் இருக்க, RDA பாதையாக ஒரு பாதை பிரகடனப்படுத்தப்படும் போது அதில் வரும் கட்டுப்பாடுகள் முக்கியம். Central Road இனை நாம் RDA வீதியாக மாற்ற இயலாது. ஏனென்றால் இன்றைக்கு சன நெருக்கத்தோடு இருக்கின்ற பாதை.

ஆனால் பௌஸ் மாவத்தை போல பாதை RDA வீதியாக மாற்றுப்பட்டால், அப் பாதை அகலமாவது பாதுகாக்கப்படும். அப்படி நாம் சில பாதைகளை இனங்கண்டு அவைகளை RDA பாதைகளாக மாற்றுவதற்கு நாம் சிபார்சு செய்யலாமே தவிர நாம் திணிக்க முடியாது. அது அரசாங்கத்தின் தீர்மானம். ஆனால் நியாயப்படுத்தும் போது நிச்சயமாக அதற்குள் வரலாம். அப்படியானால் கௌரவ உறுப்பினர் நளீம் அவர்களின் முன்மொழிவை உள்வாங்கி பௌசி மாவத்தை அதாவது அது பௌசி மாவத்தை என்ற பெயரில் இல்லை. உடங்கா வீதி என்றுதான் RDA பதிவில் இருக்கின்றது. உடங்கா விளினியடி சந்தியில் இருந்து வங்களாவடி வீதியினை வீதி அபிவிருத்தி அதிகார சபையின் கீழ் பராமரிப்பதற்கு இந்த சபை சிபார்சு செய்கின்றது என்ற ஒரு தீர்மானத்தை எடுத்து அனுப்புவது உகந்தது என்று நான் நினைக்கின்றேன். இதற்கு மாற்றுக்கருத்துக்கள் இருந்தால் கூறலாம்.

**கௌரவ உப தவிசாளர் ஏ.அச்சி முஹம்மட் அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே, இதற்கு மாற்றுக் கருத்தே இல்லை. ஏனென்றால் ஒரு கிழமைக்கு பின்னர் சென்று பார்த்தால் 04 கடைகள் கட்டப்பட்டு இருக்கும். அப்படி மிக வேகமாக முன்னேறிக் கொண்டு செல்கின்ற பாதை. முடிந்தால் பாதையாக தீர்மானம் எடுப்பதோடு அதன் ஊடாக பஸ் சேவையினை வழங்குவதற்கும் CTB இற்கு கடிதத்தை எழுதுவது மிகவும் சிறப்பாக இருக்கும்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

நாம் பல முறை கடிதம் எழுதி இருக்கின்றோம். இந்த தீர்மானத்திற்குள் உள்வாங்குவோம். சம்மாந்துறை, இறக்காமம், அம்பாரை பஸ் சேவையும், சம்மாந்துறை நெல்லுபிடிச் சந்தியில் இருந்து பௌஸ் மாவத்தை ஊடாக ஒரு சேவையை செய்வதற்கும் எழுதி இருக்கின்றோம்.

**தீர்மானம் - 04/41/09**

பௌஸ் மாவத்தை வீதியினை (உடங்கா வீதி) வீதி அபிவிருத்தி அதிகார சபையின் கீழ் கொண்டு வருவதற்கும், அவ் வீதியின் ஊடாக பஸ் போக்குவரத்து சேவையினை பெறுவதற்கும் சிபார்சு செய்வதற்கான பிரேரணை.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | எஸ்.நளீம் |
| ஆமோதித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |

பிரேரணை சபையில் சமூகமளித்திருந்த கௌரவ உறுப்பினர்களால் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
பாதைகள் விடயத்தில் கருவாட்டுக்கல் - 01 இல் 10 மீற்றர் வீதியினை செய்ய வேண்டும்.

## தீர்மானம் - 04/41/10

கருவாட்டுக்கல் - 01 இல் உள்ள 10M வீதியினை திருத்தம் செய்வதற்கான பிரேரணை.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | எம்.ரீ.பௌசுள்ளாஹ் |

பிரேரணை சபையில் சமூகமளித்திருந்த கௌரவ உறுப்பினர்களால் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

## தீர்மானம் - 04/41/11

எதிர்வரும் ஹஜ்ஜுப் பெருநாளை முன்னிட்டு மணிக்கூட்டுக் கோபுரம், பொதுச் சந்தை, பிரதான அலுவலகம் போன்ற இடங்களில் மின் விளக்குகளால் அலங்கரிப்பதற்கான பிரேரணை.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | எம்.எஸ்.சரீபா |

பிரேரணை சபையில் சமூகமளித்திருந்த கௌரவ உறுப்பினர்களால் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
கௌரவ உறுப்பினர் குலமணி அவர்கள் 10 விடயங்களைப் பற்றி அறிவித்திருக்கின்றார். நாளாந்தம் நடைமுறைப்படுத்த வேண்டியவைகள். அதில் பிரச்சினை இல்லை. அதில் மல்லிகைதீவு மற்றும் மல்வத்தை வளத்தாப்பிட்டி வரையான வீதிக்கு சூரிய மின் விளக்குகள் அமைப்பதற்கு சபை ஊடாக உரிய அமைச்சுக்கு அனுப்புதல் இவ்விடயத்தை நீங்கள் முன்மொழியலாம். அது ஒரு திட்டம். அதற்கு நாம் ஒரு Proposal அனுப்பலாம். அவ் வீதிகளில் தொடர்ந்து பிரயாணிகள் கிராமத்திற்கு மட்டுமல்ல விவசாய நடவடிக்கைகளுக்காக செல்கின்ற இடம். தற்போது ஆபத்தான இடம். மண் ஏற்றி வருகின்ற வாகனங்கள் வருகின்ற போது ஒதுங்கி வயலுக்குள் செல்ல வேண்டி இருக்கும். அந்த வேகத்தில் வருகின்றது. இம் முன்மொழிவை சபை ஏற்று RDA இற்கு அறிவிக்க வேண்டும்.

**கௌரவ உறுப்பினர் எஸ்.நளீம் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, சூரிய மின் விளக்குகள் போடுகின்ற போது பள்ளாத்தடியில் இருந்து நைனாகாட்டுக்கு செல்லுகின்ற பாதையிலும் இவ்வாறு செய்ய வேண்டும். ஏற்கனவே ஒரு அமர்விலே முன்மொழிவு ஒன்று தந்திருக்கின்றேன். ஆனால் கடந்த நல்லாட்சி அரசாங்கத்தினுடைய ஆட்சியில் அதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டது. துரதிஸ்டவசமாக ஆட்சி இல்லாததனால் நடைபெறவில்லை. ஆகவே இரண்டையும் ஒன்றாக சேர்த்து அந்த தீர்மானத்தை அனுப்பினால் நல்லது என்று நினைக்கின்றேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
அரசின் பிரதிநிதிகள் ஒளியூட்டும் திட்டங்களை செய்யும் போது அந்த செயல் இனால் ஒரு பகுதியை மாற்றக்கூடிய வகையில் செய்தால் உகந்ததாக இருக்கும். உதாரணத்திற்கு கைகாட்டி சந்தியில் இருந்து நீதிமன்றம் வரை ஒரு ஏற்பாடு செய்தால் அந்த பிரதேசமே மாற்றப்படும். 30, 40 மின்குமிழ்கள் போடப்பட்டால் அந்தப்பகுதி ஒளியூட்டப்பட்டதாக இருக்கும். வீரமுனை கிராமத்திற்கு சென்று பார்த்தால் பிரதான வீதி அவ்வளவும் ஒளியூட்டப்பட்டதாக இருக்கும். அதே மாதிரி ஒவ்வொரு பகுதியாக எடுத்து செயற்படுத்தினால் நல்லது.

**கௌரவ உறுப்பினர் எஸ்.எம்.எஸ்.நிலுவ்பா அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, சம்மாந்துறையின் பொது விளையாட்டு மைதானத்தில் எல்லா அரசியல்வாதிகளும் தலையிடுகின்றார்கள். சம்மாந்துறைக்கு என்று தனியே பிரதேச சபையும், பிரதேச செயலகமும் இருக்கின்ற நேரத்தில் காரைதீவு பிரதேச சபையின் கௌரவ தவிசாளர் சம்மாந்துறை பிரதேச சபைக்குட்பட்ட விளையாட்டு மைதானத்திற்கு வந்து அந்தப் பிரச்சினையை தீர்த்து வைக்கின்ற அளவுக்கு சம்மாந்துறையில் யாரும் கையாலாகாரவர்கள் அல்ல. கௌரவ தவிசாளர் உட்பட கௌரவ உறுப்பினர்கள் 20 பேர் இருக்கின்ற இந்த ஊரில் காரைதீவு பிரதேச சபையின் கௌரவ தவிசாளர் ஏன் இந்த ஊருக்கு வந்து அப் பிரச்சினையை உள்வாங்க வேண்டும். இதை எங்களது சபை மூலம் நாங்கள் அவருக்கு ஒரு அறிக்கையை இட்டால் என்ன என்பது எனது கருத்து.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
நீங்கள் அதை பின்தொடரவில்லை என்று நினைக்கின்றேன். ஒரு மக்கள் பிரதிநிதி மக்களின் அழைப்பின் பேரில் வந்து ஒரு பிரச்சினையை கேட்டறிவது பிழையாக எடுத்துக் கொள்ள முடியாது. வட்டார முறையில் அரசியல் மாவட்ட ரீதியில் இருக்கின்ற படியினால், ஆனால் அவர் வந்து அறிக்கை இட்டதற்கு பதிலாக நான் அறிக்கை இட்டிருந்தேன். அது அரசியல் முதிர்ச்சி இல்லாத ஒரு விடயம். அடுத்தது ஒரு இனத்தின் பிரச்சினையை அல்லது அவர்களின் கதையை கேட்டு இன்னொரு இனத்திற்கு குறை கூறுவது பொருத்தமானது அல்ல. ஏற்றுக் கொள்ள முடியாது என்று நான் மிகவும் நாகரீகமாக அவர் செய்தது அவரின் முதிர்ச்சி இன்மையை காட்டுகின்றது என்று, அதில் தமிழ் அரசியல்வாதிகள் பலர் என்னிடம் பேசி இது முறைகேடான விடயம் இதற்கு நீங்கள் கொடுத்த பதில் தகுதியான பதில் என்று கூறியிருக்கின்றார்கள். நீங்கள் எல்லோரும் ஒத்துழைத்தால் சபையின் தீர்மானமாகவும் அதை எடுத்து அவருக்கு அறிவிக்கலாம். ஆனால் என்னைப் பொருத்தமட்டில் அவரை இன்னும் ஒரு பெரிய மனிதனாக காட்ட முயற்சிப்பதாக இருக்கும். அவர் பேசினார் அதற்கு நாம் பதில் கொடுத்து விட்டோம். அதை சபையின் தீர்மானமாக எடுத்து அனுப்புவது என்பது ஏதோ அவருக்கு அஞ்சியதாக காட்டும் என்று நினைக்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் எஸ்.எம்.எஸ்.நிலுவ்பா அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, இதில் என்னுடைய கருத்து என்னவென்றால் அவரை பெரிய மனிதனாக்குவதற்கு அல்ல. அவர் செய்த பிழையை நாம் சுட்டிக்காட்டுவது நல்லது. இந்த மைதானத்தில் இரு இன மக்களும் விளையாடுவது எந்தவிதமான பிரச்சினைகளும் இல்லாமல் விளையாடுகின்ற இடத்தில் அவர் உள்வாங்கியது ஒரு இனவாதத்தை தூண்டுவது போல் இருக்கின்றது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
தனிப்பட்ட முறையில் உங்கள் சார்பாக தவிசாளர் என்ற ரீதியில் இதை நான் நாகரீகமான முறையில் அவருக்கு அவர் செய்தது பிழை என்று கூறியிருக்கின்றேன். இதை சபை தீர்மானமாக எடுப்பதானால் வேறு கருத்துக்கள்.

**கௌரவ உறுப்பினர் எஸ்.நளீம் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, நீங்கள் கூறியவாறு அவருடைய அரசியல் முதிர்ச்சி இல்லாததுதான் அவர் அந்தளவுக்கு அந்த விடயத்தை கையாண்ட முறை. ஆனால் உண்மையாக இந்த நாட்டினுடைய ஜனாதிபதி அவர்கள் சம்மாந்துறைக்கு வருவதாக இருந்தாலும் தவிசாளரிடம் முன்கூட்டி ஒரு அனுமதி எடுக்க வேண்டும் என்ற நியதி இருக்கின்றது. எந்தவிதமான முன்னறிவித்தலும் இல்லாமல் தன்னுடைய அரசியல் முதிர்ச்சி இன்மை காரணத்தினால்தான் ஏதோ அவர் அந்த வயதின் கோட்பாடு காரணமாகவும் அவர் அந்த செயலில் ஈடுபட்டிருந்தார். சம்மாந்துறையை பொருத்தவரையில் கடந்த காலங்களிலே சில தவறுகள் இரண்டு சமூகங்களுக்கிடையிலே சில சந்தர்ப்பங்களில் ஏற்பட்டு இருந்தாலும் இனி இருக்கின்ற காலங்களில் அவ்வாறான சந்தர்ப்பங்கள் ஏற்படுவதற்கு நாம் குறிப்பாக இந்த சபையின் ஊடாக அவ்வாறான ஒரு சந்தர்ப்பம் ஏற்படுவதை ஏற்றுக் கொள்ள முடியாது. தற்போது இந்த நாடு இருக்கின்ற சூழ்நிலை குறிப்பாக இன்று இருக்கின்ற இளைஞர்களுடைய எதிர்காலம் என்னவாக அமையும் என்பதை சற்று

மேலும் சிந்திக்காமல் அவர்கள் செயற்பட்ட விதம்தான் காரைதீவு பிரதேச சபையினுடைய கௌரவ தவிசாளர் அவர்கள் இங்கு வர வேண்டிய நிலமை ஏற்பட்டது. இல்லாவிட்டால் இதற்கு முன்பு எந்தவொரு தேவைகளுக்காகவுமே அவர் இங்கு வரவும் இல்லை. எமது சபை விடயங்களில் தலையிடவும் இல்லை. எங்களுடைய இளைஞர்கள் அவ்விடத்திலே நடந்துகொண்ட விதமும் குறிப்பாக அதில் சில தவறுகள் நடந்திருக்கின்றது. நாங்கள் சில விடயங்களை வெளிப்படையாக பேசினால் இன்னும் இன்னும் இரண்டு சமூகங்களுக்கிடையிலே முரண்பாடுகள் வரக்கூடிய சந்தர்ப்பம் தான் அவ்விடத்திலே ஏற்படும். ஆகவே நாம் இந்த விடயத்தை கௌரவ தவிசாளர் அவர்கள் கூறியவாறு பெரிதுபடுத்தாமல் முடியுமாக இருந்தால் ஒரு சந்தர்ப்பம் கிடைக்குமாக இருந்தால் அவரும் நாமும் கலந்துரையாடக்கூடிய சந்தர்ப்பம் கிடைத்தால் அந்த சந்தர்ப்பத்திலே அவருக்கு நாம் தெளிவு படுத்துவோம். இதை பெரிய விடயமாக நாம் கொண்டு செல்வது இப்போது நமது நாடும் நமது சமூகமும், நாமும் இருக்கின்ற சூழ்நிலையில் அவ்வளவு சாலச் சிறந்தது அல்ல என்பதை எனது கருத்தாக தெரிவித்துக் கொள்கின்றேன்.

**கௌரவ உப தவிசாளர் ஏ.அச்சி முஹம்மட் அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே, இது ஒரு சமூகப் பிரச்சினையே இல்லை. ஆனால் அதை சமூகப் பிரச்சினையாக உருப்படுத்துகின்றார்கள். நமது இளைஞர்கள் கேட்டது மைதானம் என்றால் அதில் Cricket, Foot Ball விளையாடக்கூடிய மாதிரி இடவசதி ஏற்படுத்தி தாருங்கள் என்றுதான் கேட்டது. இது பிழையா? இது பிழையே இல்லை. இருந்தாலும் அவர்கள் இருக்கின்ற மனோ நிலை என்னவென்றால் அங்கு இருக்கின்ற சின்னப் பிள்ளைகளுக்கு கூட இனவாதத்தை தூண்டி இருக்கின்றார்கள். காலையில் நீங்கள் சென்றுபார்த்தால் மைதானத்தில் நடக்கின்ற அவ்வளவு பேரும் அந்த பிரதேசத்தில் உள்ளவர்கள்தான். அந்தப் பிள்ளைகள்தான் அங்கு விளையாடுகின்றார்கள். ஆர்ப்பாட்டம் செய்த இளைஞர்கள் Foot Ball, Cricket விளையாடுவது என்றால் மட்டும்தான் செல்கின்றார்கள். அவர்களுக்கு நிரந்தரமாக அது சொந்தமும் இல்லை. உண்மையாக போராட வேண்டியவர்கள் அவர்கள்தான். இந்த மைதானம் பெரிதாக இருக்க வேண்டும். இதில் விளையாட்டு போட்டிகள் செய்வது என்றால் அதற்கான ஒழுங்குகள் செய்துதர வேண்டும் என்று கேட்க வேண்டியது பக்கத்தில் இருப்பவர்கள். ஆனால் அவர்களிடம் ஒரு மனோநிலை இருக்கின்றது என்னவென்றால் அவர்களுக்கு ஏற்கனவே அவர்கள் எங்களது மிக முக்கியமாக தேவைகளை நிறைவு செய்கின்ற தொழிலாளியாக இருந்ததன் காரணமாகத்தான் அந்த இடத்தை முன்னாள் கௌரவ தவிசாளர் அவர்கள் அந்த நேரம் இருந்த அந்த நிலமையை கருதி அந்த இடத்தை அவர்களுக்கு கொடுத்தது. அங்கு இருந்தவர்களின் சனப்பெருக்கம் கூடிவிட்டது.

கௌரவ தவிசாளர் அவர்களிடம் கூறியிருக்கின்றேன் அதற்கு முன்னால் இருக்கின்ற இடத்திற்கு சரியான அனுமதி எடுத்து மதிலை கட்ட வேண்டும். அவர்கள் தற்போது கன்றுகளை வைத்து நமது அனுமதி இல்லாமல் நடமாடுகின்றார்கள். அது பிழை. நாங்கள் இவ்வளவுதான் எல்லை என்று நாம் நாட்டிய கட்டைகளை உடைத்து இருக்கின்றார்கள். இவைகளை நாம் பெரிதுபடுத்தி ஏனைய இடங்களுக்கு சொல்லவில்லை. அவர்களின் உளப்போக்கில் பார்த்தது என்னவென்றால் 40, 45 குடும்பங்கள் இருந்தால் 90 குடும்பங்களுக்கு நாம் நிலத்திற்கு எங்கு போவது என்று சொல்லி அந்த பிரதேசத்தில் இருக்கின்ற நிலத்தைத்தான் எடுக்க வேண்டும் என்ற ஒரு எண்ணப்பாங்கில்தான் இருக்கின்றது. அதற்கு அவர்கள் பூசுகின்ற சாயம் என்னவென்றால் இது ஒரு பெரும்பான்மை சமூகம் எங்களை நசுக்குகின்றார்கள் என்று, ஆனால் அரசியல்வாதிகளுக்கு இங்கு இருக்கின்ற நிலமை தெரிவதில்லை. இவர்கள் சென்று எங்களது பிரதேசத்திற்குள் நிலத்தை ஆக்கிரமிக்கின்றார்கள், எங்களுக்கு வீதி அமைத்து தருகின்றார்கள் இல்லை என்று. உண்மையாக தவிசாளர் இளைஞர்களோடு முரண்பட்ட நிலையில்தான் இருக்கின்றார்கள். ஏனென்றால் வீதி என்பது மீதியை முடித்து விட வேண்டும். அந்த வீதி குறையாக இருக்கக்கூடாது. அந்த மக்களோ, நாமோ அந்த வீதியில் பிரயாணம் செய்ய வேண்டும் என்றால் அந்த வீதியை செய்ய வேண்டும். அதற்கு ஏற்ற ஏற்பாட்டை கௌரவ உறுப்பினர் அஸ்பர் அவர்களும் சேர்ந்து இப்படித்தான் செய்ய வேண்டும் என்று கூறி நல்ல ஒரு திட்டத்தை கொண்டுவந்தார். தற்போது நமக்கு நடைமுறைப்படுத்த இயலாது. நடைமுறைப்படுத்தினால் எம்மிடம் இருக்கின்ற நிலத்தை வழங்கினால் எல்லோருக்கும் வழங்க வேண்டிய நிலை ஏற்படும். பெரும்பான்மையில் இருக்கின்றவர்களும் எங்களுக்கு தாங்கள் என்று கேட்கலாம்.

சம்மாந்துறையை பொருத்தவரையில் நூற்றுக்கு 90 வீதமான பெரும்பான்மையான முஸ்லிம் மக்கள். அதில் எத்தனையோ பேரை நாம் அறிகின்றோம் இடமே இல்லை. ஆயிரக்கணக்கான குடும்பங்கள் இடம் இல்லாமல் இருக்கின்றது. நாங்கள் 45 பேருக்கு கொடுக்க வேண்டும் என்று நினைத்தால் ஆயிரக்கணக்கான மக்களும் எங்களுக்கு தாங்கள் என்று கேட்டால் என்ன செய்வது. பொதுவான இடங்கள் பாதுகாக்கப்பட வேண்டும். அப் பிரதேசத்தில் இருக்கின்ற மக்களுக்கு முடிந்தளவில் நாங்கள் இப்படித்தான் என்கின்ற நிலமைகளை அவர்களுக்கு எடுத்துக்காட்ட வேண்டும். அவர்களுக்கு எந்தவொரு சிறு துரும்புகள் கூட பாதிக்காத அளவு நாம் நடந்து கொள்ள வேண்டும். இளைஞர்கள் வந்து கேட்டு பிரதேச சபையோடு நின்றுவிட்டார்கள். ஆனால் அவர்கள் ஆளுனர் வரை சென்றிருக்கின்றார்கள். கிட்டத்தட்ட விளையாட்டு அமைச்சு வரை சென்றிருக்கின்றது. இப் பிரதேசத்தில் இருக்கின்ற கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் கலையரசன் அவர்கள் கூட வந்து பார்த்திருக்கின்றார்கள்.

தற்போது இப் பிரதேசத்தில் இருக்கின்ற அனைத்து அரசியல்வாதிகளும் குறிப்பாக தமிழ் தேசிய கூட்டமைப்பில் இருந்து ஏனைய அரசியல்வாதிகளும் தவிசாளர் அவர்கள் இருக்கும் வரைக்கும் சிறுபான்மை மக்களுக்கு நடக்காது. ஏனென்றால் அவரது செல்வாக்கே அவர்களுக்கு உதவி செய்வதால் குறைந்து கொண்டிருக்கின்றார்கள். என்ற நம்பிக்கையினால்தான் இந்த விடயம் இந்தளவுக்கு பூதாதாரம் எடுக்காமல் ஒரு மட்டத்தில் அவர்களிடம் சென்றவுடன் அப்படி நடந்து கொள்ளமாட்டார்கள். உண்மையாக இந்த இடத்தில் வேறொருவர் இருந்திருந்தால் பாரிய இனக்கலவரம் அப் பிரதேச மக்கள் நடந்து கொள்கின்ற முறையில் ஏற்பட்டு இருக்கும். அவர்கள் அவர்களது நிலமையை புரிந்து கொண்டு நடக்க வேண்டும். எனது மனசாட்சிப்படி அவ் வீதி செய்ய வேண்டும். அவர்கள் 5 மீற்றர் கேட்டார்கள். நான் கௌரவ பாராளுமன்ற உறுப்பினரிடம் 4 மீற்றருக்கு மேலாக போட இயலாது என்று கூறினேன். அதை அவர் ஏற்றுக்கொண்டார். நம்பிக்கையோடு சொன்னார் உங்களது தவிசாளர் இருக்கும் வரைக்கும் இப் பிரச்சினை இருக்காது. வீரமுனை மக்களுக்கு எவ்வளவோ வேலைகள் செய்திருக்கின்றோம். அந்த மக்கள் ஒரு குறையும் சொல்ல இயலாது. அதே போல் வளத்தாப்பிட்டி, மல்வத்தை மக்களுக்கு செய்திருக்கின்றோம். கௌரவ உறுப்பினர் நளீம் அவர்களின் பிரதேசத்தில் எத்தனையோ தண்ணீர் பைப் இல்லாமல் இருந்தும் மல்லிகைதீவு மக்களுக்கு தண்ணீர் கொடுக்கின்ற நேரம் சிறப்பான முறையில் நடந்து கொள்கின்றோம். இதை மற்றவர்கள் எடுத்து சொல்ல வேண்டும்.

இன்றைக்கு கூட தமிழ் நாட்டில் முஸ்லிம் மக்கள் இருக்கின்ற தமிழ் தலைவர்கள் நடந்து கொண்ட முறையை சொல்ல சொல்லத்தான் ஒற்றுமையாக பிரச்சினைகள் இல்லாமல் கதர் என்று சொன்னால் மரியாதை என்று சொல். அந்த கதர் என்பதை காந்திக்கு கொடுத்தது ஒரு முஸ்லிம் பெரியார். எனது தாய் உங்களுக்காக தந்த மரியாதைக்கான பொருள். அதே ஆடையை வைத்துதான் இந்தியாவுக்கு சுதந்திரமே கிடைத்திருக்கின்றது. அவ்வாறு நாங்களும் ஒற்றுமையாக வாழ வேண்டும். அங்கு இருக்கின்ற சிறு பிள்ளைகள் கூட எம்மை எதிரியாக பார்க்கின்றது. இந்த நிலமை தொடரக்கூடாது. அந்தப்பாதை மற்ற பாதையுடன் இணைய வேண்டும் என்ற இடத்தில் அவர்கள் மறித்து கட்டை போட்டிருக்கின்றார்கள். அதை சென்று பார்க்க வேண்டும். அப்படி அவர்கள் நாம் செய்ததற்கு எதிர்ப்பு தெரிவிக்கவில்லையே. அது செய்ய இயலாது. எப்படி நமது கட்டையை உடைப்பார்கள். பிரதேச சபைக்கு சொந்தமான எல்லைக் கட்டையை உடைத்து இருக்கின்றார்கள். இவைகளை நாம் அமைச்சு வரை கொண்டு செல்லவில்லையே. ஆகையினால் இந்த விடயத்தில் நீங்களும் மற்றவர்கள் வைத்திருக்கின்ற நம்பிக்கைக்கு பாத்திரமாக நடந்து கொள்ள வேண்டும். இனிமேல் இப்படியான பிரச்சினைகள் வருகின்ற போது இப் பிரதேச சபையில் இருக்கின்ற கன்னியத்திற்குரிய தமிழ் உறுப்பினர்களிடமும் நியாயத்தை அவர்கள் மூலமாகத்தான் அறிக்கை விட வேண்டும் என்பதுதான் என்று தாழ்மையாக கேட்டுக் கொள்கின்றேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

கௌரவ உப தவிசாளர் அவர்கள் இந்த விடயத்தை கூறிய படியினால் நான் இந்த சபையில் ஒரு விடயத்தை தெளிவுபடுத்த வேண்டும். சென்றகிழமை நமது முன்னால் உபதவிசாளர், முன்னால் கௌரவ உறுப்பினர் அவர்கள் எனது தொலைபேசிக்கு ஒரு Voice Message அனுப்பி இருந்தார். அது உண்மையாக எனக்கு பெரிய ஒரு மன அழுத்தத்தை உருவாக்கியது. இந்த சபைக்கு நான்

தவிசாளராக வந்த காலத்தில் இருந்து சுகாதார ஊழியர்கள் நியமிக்கப்படும் போது ஆகக்குறைந்தது 50, 60 வீதமான இடங்கள் வழங்கப்படுவது புது வளத்தாப்பிட்டி, உதயபுரம் ஆகிய இரண்டு கிராமங்களை சேர்ந்த மக்களுக்கு. இதற்கு காரணம் அவர்களின் மூதாதையர்கள் இப் பகுதிக்கு வந்து குடியமர்த்தப்பட்டதோ அதே தொழிலுக்காக. அந்த தொழிலை அவர்கள் கோரும் போது நிச்சயமாக ஒரு நன்றிக் கடனாக அவர்களுக்கு அதை வழங்க வேண்டும் என்ற ஒரு முன்னுரிமைப்படுத்தலில் சம்மாந்துறை பிரதேச சபை எல்லைக்குள் 5% இற்கும் குறைவான தமிழ் மக்கள் இருந்தும் 50% இற்கு மேற்பட்ட தொழில் வாய்ப்புகள் அந்த அடிப்படையில் அந்த மக்களுக்கு வழங்கப்பட்டிருக்கின்றது.

இன்று அவர்கள் அந்த தொழிலில் இருந்து பலர் சாரதிகளாக மாறி இருக்கின்றார்கள், காவலாளிகளாக மாறி இருக்கின்றார்கள். சபையின் தேவைக்கு ஏற்ப அவர்களின் உடல்நிலைக்கு ஏற்ப சில மாற்றங்கள் நடந்திருக்கின்றது. ஆனால் முக்கியமாக அவர்கள் சுகாதார ஊழியர்களாக எடுக்கப்படுவதற்கும் அவர்களுக்கு முன்னுரிமைப்படுத்தப்படுவதும் அந்த நன்றிக் கடனுக்காக, அதை நாங்கள் மட்டும்தான் இந்த தொழிலை செய்ய வேண்டுமா? ஏன் எங்கள் மக்களை பழிவாங்குகின்றீர்கள்? என்ற ஒரு ரீதியில் ஒரு பதிவு செய்யும் போது என் மனதுக்கு அது ஒரு பாரிய வேதனையை உருவாக்குகின்றது. அவர் இந்த கௌரவ சபையில் அங்கத்தவராக இருக்கும் போது புது வளத்தாப்பிட்டியில் பெரும்பாலான ஊழியர்கள் உள்வாங்கப்பட்டதற்கு முக்கிய காரணம் இதுதான். மல்வத்தையிலோ, வீரமுனையிலோ 1, 2 பேர் தான் எடுக்கப்பட்டது. இவர்களுக்கு முன்னுரிமை கொடுத்தது இந்த ஊரின் நன்றிக்கடன். அவர்கள் செய்த கஸ்டமான தொழிலை மதித்து கொடுத்தது. அதையோ வைத்து நீங்கள் எங்களை பழிவாங்குகின்றீர்கள். நாங்கள் முன்னேறுவதில்லையா என்று கேட்பது நியாயம் இல்லாத ஒரு விடயம். அடுத்தது நாம் எல்லோரும் விளங்க வேண்டும். நாம் மக்கள் பிரதிநிதிகள் இங்கு ஒரு காலத்திற்கு வருவோம். காலம் முடிந்ததும் வெளியேறுவோம். அந்த ஊழியர்களை பராமரிக்கும் பொறுப்பு இந்த சபையில் இருக்கும் நிரந்தர நிர்வாகிகளுக்கு இருக்கின்றது. அவர்களோடு முரண்பட்டு இவர்கள் நம் ஆதரவை தேடி இந்த தொழில் மாற்றங்களை செய்வார்களானால் அது அவர்களைத்தான் பாதிக்கும். அதை அவர்கள் உள்வாங்க வேண்டும். நாமும் அதை நாசூக்காக அதை அடைவதற்கு முயற்சிக்க வேண்டுமே தவிர அதை ஒரு அங்கத்தவராக வந்து அழுத்தம் கொடுத்து செய்யப்போனால் அந்த விடயம் தற்காலிகமாக நடக்கலாம். ஆனால் நிரந்தரமாக பாதிக்கப்படப்போவது அந்த ஊழியர் என்பதை நான் சுட்டிக்காட்டப்பட்ட விரும்புகின்றேன்.

அடுத்தது இந்த உதயபுர விடயம் நமது கௌரவ உறுப்பினர் கோவிந்தசாமி அவர்கள் இருக்கின்றார்கள். அவருக்கு இந்த ஊரின் சரித்திரம் நன்றாக தெரியும். ஒழித்து மறைப்பதற்கு எதுவும் இல்லை. நெல்லுப்பிடி ஆத்தோரம் கொட்டில்களில் மிகவும் அவதிப்பட்டுக் கொண்டிருந்த 3, 4 குடும்பங்களை தொழிலில் அந்தக் காலத்தில் ஈடுபட்டுக் கொண்டிருந்தவர்களை அவர்களுக்கு நன்றிக்கடனாக அவர்கள் இந்த மண்ணில் இருக்க வேண்டும் என்று அரச காணியில் அவர்கள் குடியமர்த்தப்பட்டு இந்த ஊரில் பதிவு செய்யப்பட்டு, இன்று வெளியில் இருந்து வந்து திருமணம் செய்து பல குடும்பங்களாக மாறி இருக்கின்றார்கள். அவர்களை சில அரசியல்வாதிகள் தூண்டுகின்றார்கள். ஆனால் அந்த பெரும்பான்மைதான் அவர்களுக்கு நிரந்தர முகவரி கொடுத்தது என்பது மறைக்க முடியாத உண்மை.

நிச்சயமாக அவர்களுக்கும் பிரச்சினைகள் இருக்கின்றது. அவர்களின் பிரச்சினைகள் உள்வாங்கப்பட வேண்டும். அப் பிரச்சினைகள் உள்வாங்கப்பட்டு அதற்கு கௌரவ உப தவிசாளர் அவர்கள் சொன்னது போல் தமிழ் மக்கள் என் மேல் வைத்திருந்த நம்பிக்கைக்கு காரணம் நான் நடந்து கொள்ளும் விதம். அடுத்தது எனது மூதாதையர்கள் நடந்து கொண்ட விதம். அதை நான் பகிரங்கமாக கூறி இருக்கின்றேன். சம்மாந்துறையில் 1960 ஆம் ஆண்டில் இருந்து 1977ஆம் ஆண்டு தொகுதி ரீதியில் பொத்துவில் தொகுதியில் பிரதிநிதியாக சம்மாந்துறையில் ஒரு முஸ்லிம் மகன் இருந்ததற்கு இந்த கிராமத்தை சுற்றி வாழும் தமிழ் மக்களின் ஆதரவு எவ்வளவு முக்கியமாக இருந்தது என்பது சரித்திரம் தெரிந்த உண்மை. அந்த நன்றிக்கடன் எப்போதும் இருக்கும். சம்மாந்துறையின் பிரதேச சபை ஒரு காலமும் இன ரீதியாக இயங்கியதும் இல்லை. இயங்கப்போவதும் இல்லை என்று உங்களின் கவனத்திற்கு கூறுகின்றேன்.

**கௌரவ உறுப்பினர் யூ.எல்.அஸ்பர் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, பொது விளையாட்டு மைதான பிரச்சினைகள் வந்த போது முதன் முதலில் முகங்கொடுத்தவன் நான். இது விடயமாக ஒரு சில உறுப்பினர்களை அவசரமாக அழைத்து முடிவு எடுத்திருக்கின்றீர்கள். அதற்கு என்னை அழைக்கவில்லை.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
நீங்களும் அதில் உள்வாங்கப்பட்டிருக்க வேண்டும். எப்படி விடுபட்டீர்கள் என்று தெரியவில்லை. அதில் ஈடுபட்டவர்கள் அனைவரும் அழைக்கப்பட்டது. அதில் எல்லோரினதும் கருத்து என்னவென்றால் அப் பாதை ஒருவருக்கும் பாதிப்பு இல்லாமல் அதை செய்வதற்கு ஆவண செய்ய வேண்டும் என்பது எல்லோரினது கருத்து.

**கௌரவ உறுப்பினர் யூ.எல்.அஸ்பர் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, நீங்கள் பேசியதற்கு பின்னர் கோயில் செயலாளர் என்னை சந்தித்தார். எங்களுடைய தவிசாளரினுடைய முடிவு இதுதான். விளையாட்டு மைதானத்தோடு அமைந்ததாக பாதைகள் புணரமைக்கப்பட வேண்டும் என்ற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்ற விடயத்தை எத்தி வைத்த போது, அவர்கள் கூறினார்கள் இல்லை. பாதை பாதையாக புணரமைக்கப்பட வேண்டும். நாம் எல்லோரும் கவனத்தில் எடுக்க வேண்டியது எவ்வளவோ பெரிய ஊராக இருந்தாலும் தற்போது விளையாட்டு மைதானம் என்று சொன்னால் அது மாத்திரம்தான். இங்கே இரண்டு சமூகத்தை சேர்ந்த உறுப்பினர்கள் இருக்கின்றோம். இதற்கான நிரந்தர ஒரு தீர்வை நாம் எல்லோரும் ஒரு இணக்கப்பாடாக இனவாதங்களுக்கு அப்பால் முரண்பாடுகள் வராத நிலையில் நடந்து கொள்ள வேண்டும் என்பதுதான் எல்லோரினது அவாவும். வாலிபர்கள் ஒருவருக்கு ஒருவர் கை வைத்தால் இன முறுகல் ஏற்பட்டுவிடும். அந்த அச்சம் தான் எல்லோருக்கும். எனவே இதை இன்னும் இன்னும் நாம் நீடித்து போகாமல் இதற்கு ஒரு முடிவு எடுக்க வேண்டும். கௌரவ தவிசாளரிடம் ஏற்கனவே நானும் வந்து கதைத்து இருக்கின்றேன். அந்த வடிகானுக்கு பக்கத்தில் இருக்கின்ற 3, 4 வீடுகள் அதுவும் நிரந்தரமான வீடு அல்ல. தற்காலிகமான வீடுகள். அதை எமக்கு சொந்தமான காணியில் வீடு அமைப்பு அதிகார சபையினால் வீட்டுத்திட்டங்களை ஏற்படுத்தி 2, 3 பேர்களை இடமாற்றி எங்களுக்கு அந்த இடத்தை பெற்றுத்தாருங்கள் என்பதுதான் அவ் விளையாட்டு வீரர்களின் கேள்வியாக இருக்கின்றது.

எங்களுடைய விளையாட்டு எல்லை பாதைக்கு அப்பால் பாதையில் நின்று விளையாடுகின்ற சூழ்நிலை ஏற்படும் போது அந்தப் பாதை ஊடாக பிரயாணிகள் பிரயாணிக்கும் போது பிரயாணிகளை பார்ப்பதா? வாகனங்களை பார்ப்பதா? விளையாட்டை கவனிப்பதா? என்ற கேள்விக்குறியாக இருக்கின்றது. பாதையை ஒதுக்கி தருமாறுதான் அவர்கள் கேட்டிருக்கின்றார்கள். தவிசாளரிடமும் பேசினேன் அங்கு குடியிருப்பவர்கள் ஏற்றுக்கொண்டால் எனக்கு பிரச்சினை இல்லை என்றுதான் தவிசாளர் அவர்களும் கூறியிருக்கின்றார். ஆனால் இந்தப் பிரச்சினையே குடியிருக்கின்ற மக்களின் காதுக்கு கொண்டு செல்ல வேண்டும். இப்படி ஒரு நிலைப்பாடு இருக்கின்றது. உங்களது பிள்ளைகளும் இங்கே விளையாட வேண்டிய சூழ்நிலை இருக்கின்றது. எனவே இதை நாம் பக்கத்தில் இருக்கின்ற வளவில் ஏற்பாடு செய்து வருகின்றோம். இதை விட்டுத்தருவதற்கு சம்மதமா என்று கேட்பதற்கு எங்களது தமிழ் உறுப்பினர்களை பிரச்சினைகள் இல்லாமல் சுமூகமாக தீர்ப்பதற்கு தவிசாளர் அவர்கள் இதை தலைமை தாங்கி தமிழ் உறுப்பினர்கள் ஊடாக செய்திகளை அனுப்ப வேண்டும். இல்லாவிட்டால் இந்தப் பிரச்சினை வளர்ந்து கொண்டே இருக்கும்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
வீடு என்கின்ற விடயம் நமக்கு அப்பாற்பட்ட விடயம். இது ஆரம்பத்தில் வந்த வேண்டுகோள். அவ் வேண்டுகோளை அரச அதிபர் பிரதேச செயலாளர் எல்லோரிடமும் பேசி இந்த இடத்தின் சரித்திரத்தை வைத்து இன்று அந்த முயற்சியை எடுப்பது பொருத்தம் அல்ல என்ற ஒரு முடிவுக்கு வந்தபின்தான் நான் கௌரவ உறுப்பினர்களை அழைத்து அவர்களின் கருத்துகளை உள்வாங்கியது ஏனென்றால் இது நீங்கள் ஆரம்பத்தில் கூறியவாறு அந்தப் பகுதியில் வாழ் தமிழ் மக்களோ அங்கு விளையாடும் இளைஞர்களோ எடுக்கும் முடிவு அல்ல இந்த முடிவு பிரதேச சபையினால் எடுத்து செயற்படுத்த வேண்டிய ஒரு முடிவு. எல்லோருக்கும் அவர் அவர் சார்பாக முன்வைக்கும் விடயம்

நடக்க வேண்டும் என்று விரும்புவது சாதாரணமானது. ஆனால் அதை நீதி நியாயப்படி தீர்த்து வைக்க வேண்டியது நமது பொறுப்பு. அந்த பொறுப்பை நாம் இரண்டு சாராருக்கும் இருக்கும் சூழலில் நியாயம் ஏற்படக் கூடிய விதத்தில் அதை தீர்த்து வைக்க வேண்டும். இதை ஆராய்ந்தால் வேறு வேறு கோணத்தில் செல்லும். உங்களுக்கு தெரியும் பாரிய அளவில் ஒரு நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இன்று காலை கூட DS என்னிடம் ஆரம்ப வேலைகளை முன்மொழிவதற்கு உடனடியாக Proposal இனை தரச் சொன்னார். அந்த மைதானம் ஓரளவுக்கு 06 மாத காலத்திற்குள் ஒரு பகுதி செப்பனிடப்படுமானால் இப் பிரச்சினை நிரந்தரமாக தீர்ந்து விடும். அது போல் இடம் கிடைக்காது.

**கௌரவ உறுப்பினர் யூ.எல்.அஸ்பர் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, இனமுறுகல் ஏற்படாத வகையில் முடிவுகளை செய்தால் நல்லம் என்று நினைக்கின்றேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
வீதிகளைப் பற்றி பேச வேண்டும் என்று கூறினீர்கள்.

**கௌரவ உறுப்பினர் யூ.எல்.அஸ்பர் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, பிரதேச செயலாளரினால் தரப்பட்ட Proposal களில் Proposer கள் யார் என்றே எங்களுக்கு தெரியாது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
அதுதான் எனக்கும் இருக்கின்ற பிரச்சினை. இந்த Proposer கள் நாம் அனுப்பியது பிரதேச செயலகத்தினால் சேர்க்கப்பட்டு அனுப்பப்பட்ட பட்டியல். இதை நான் உத்தியோகபூர்வமாக எழுதி கேட்கின்றேன். சபையின் அமர்வினை இனிதே முடித்துக் கொள்கின்றேன்.

A.M.முஹம்மட் நௌசாட்
தவிசாளர்
சம்மாந்துறை பிரதேச சபை

**தீர்மானம் - 04/40/10**

2021 – 2024 ஆண்டு காலப்பகுதியில் நடைபெறவிருக்கின்ற அபிவிருத்தி வேலைத் திட்டங்களில் 01, 02, 03, 04 ஆவது வருடங்களில் கீழ்வரும் வேலைத்திட்டங்களை அமுல்படுத்துவதற்கான பிரேரணை.

1. சிறுவர் பூங்கா அமைத்தல். (வீரமுனை – 01)
2. பழைய சந்தைக் கட்டடத்தில் கேளிக்கை பூங்கா (Amusement Park) அமைத்தல். (சம்மாந்துறை – 05)

3. பொது விளையாட்டு மைதானம் அமைத்தல் (வீரமுனை – 04)
4. கலாசார மண்டபம் அமைத்தல் (மல்வத்தை – 01)

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | எம்.ரீ.பௌசுள்ளாஹ் |

பிரேரணை சபையில் சமூகமளித்திருந்த கௌரவ உறுப்பினர்களால் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.